செய்தி வெளியீடு எண்.315 நாள். **28.4.2008**

## விழுப்புரம் அருகே சாலை விபத்தில் உயிரிழந்த, காயம்பட்ட வருவாய்த் துறைப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு

## முதலமைச்சர் கலைஞர் 11 இலட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்கினார்

**விழுப்புரம் மாவட்டம் சாரம் கிராமத்தில் கடந்த வாரத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த வருவாய்த் துறைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதியிலிருந்து அரசு வழங்கும் தலா ஒன்றரை இலட்ச ரூபாய் நிதி உதவியுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயம்பட்டவர்களுக்கும் மொத்தம் 11 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கூடுதலாக நிவாரணநிதி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே ஆணையிட்டிருந்தார்.**

**அந்த ஆணையின்படி, விபத்தில் உயிரிழந்த திண்டிவனம் தாசில்தார் இரா. சுப்ரமணியத்தின் மனைவி திருமதி கிருஷ்ணகுமாரி அவர்களிடம் 5 இலட்ச ரூபாய்க்கான காசோலையையும், அலுவலக உதவியாளர் எஸ். பன்னீர் செல்வத்தின் மனைவி திருமதி பிரேமாவதிக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், மற்றொரு அலுவலக உதவியாளர் தா. ஏழுமலையின் மனைவி திருமதி இலட்சுமிக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், காயமடைந்த கோட்டாட்சியர் திரு. சீ. கேபிரியேல், ஈப்பு ஓட்டுநர் திரு. ஆர். குணசேகரன் ஆகிய இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் ஆக மொத்தம் 11 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முதலமைச்சர் கலைஞர் இன்று (28.4.2008) வழங்கினார்.**

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**